## சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகம்

முதன்முதலாக 1887-ம் ஆண்டு தொடங்கப்பட்டதிலிருந்து நீண்டகால வரலாற்றைக் கொண்டுள்ள சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகம், முற்போக்கான சிந்தனையுடன் செயல்படும் சிங்கப்பூரின் ஆகப்பழமையான அரும்பொருளகமாகும். இதன் காட்சிக்கூடங்கள் வழக்கமான அரும்பொருளக அனுபவத்தை மாற்றியமைக்க, அதிநவீன, பல்நோக்கு வழிமுறைகளைக் கையாண்டு வரலாற்றையும் கலாசாரத்தையும் படைக்கின்றன. சிங்கப்பூரின் கலாசார, கட்டடக்கலை நினைவுச்சின்னமாகத் திகழும் அரும்பொருளகம், ஆண்டு முழுவதும் காண்போரைக் கவர்ந்திழுக்கும் கலைப் பொருட்கள், வியப்பூட்டும் படைப்புகள், திரைப்படத் திரையீடுகள் ஆகியவற்றுடன் துடிப்புமிக்க சிங்கப்பூர் இரவு விழா, சிங்கப்பூர் மரபுடைமை விழா போன்ற புதுமையான விழாக்களையும் நிகழ்ச்சிகளையும் படைக்கிறது. அதுமட்டுமன்றி, முக்கியமான காட்சிப்பொருள் திரட்டுகளுடன் சிந்தனையைத் துண்டும் கண்காட்சிகளையும் படைக்கிறது. இவற்றுக்குத் துணையாக உணவு மற்றும் பானம், சில்லறைக் கடைகள், வள நிலையம் உள்ளிட்ட பலதரப்பட்ட வசதிகளும் சேவைகளும் உள்ளன.

சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகம் மூன்று ஆண்டுகாலச் சீரமைப்புப் பணிக்குப் பிறகு 2006 டிசம்பர் மாதம் மீண்டும் திறக்கப்பட்டது. 2012-ம் ஆண்டில் அரும்பொருளகம் அதன் 125-வது ஆண்டு நிறைவைக் கொண்டாடியது. அரும்பொருளகத்தின் நிரந்தரக் காட்சிக்கூடங்கள் மாற்றியமைக்கப்பட்டு, 2015 செப்டம்பர் மாதம் மீண்டும் திறக்கப்பட்டன. சுதந்திரத்திற்குப் பிந்திய சிங்கப்பூர் வரலாற்றைப் பற்றிய புதுப்புது கதைகள், விவரங்கள் ஆகியவற்றுடன், தேசிய அரும்பொருளகத்தின் புதிய நிரந்தரக் காட்சிக்கூடங்கள், 700 ஆண்டுகளுக்கு முன்பிருந்த ஆரம்பகாலத் தொடக்கத்திலிருந்து இன்றைய சுதந்திரமான, நவீனமான நகரமாக உருமாற்றம் அடைந்தது வரையிலான நாட்டின் முக்கிய தருணங்கள், சவால்கள், சாதனைகள் ஆகியவற்றைப் படைக்கின்றன.

தேசிய அரும்பொருளகத்திற்கு வருகையளித்து, சிங்கப்பூரின் வரலாற்றைப் பார்வையிடுங்கள்.

## வருகையாளருக்கான விவரங்கள்

**காட்சிக்கூடம் திறந்திருக்கும் நேரம்**

காலை 10 மணி முதல் மாலை 7 மணி வரை
(கடைசி நுழைவு மாலை 6.30 மணி)

**நுழைவு**

**குடிமக்கள், நிரந்தரவாசிகள், 6 வயது மற்றும் அதற்குக் குறைவான வயதுடைய வருகையாளர்கள் ஆகியோருக்கு அனுமதி இலவசம்.**

| | |
|---|---|
| மற்றவர்கள் | |
| பெரியவர்கள் | $15 |
| செல்லுபடியாகும் அடையாள அட்டையுள்ள மாணவர்கள் மற்றும் 60 வயது முதலான முதியவர்கள் | $10 |

ஒவ்வொரு நுழைவுச்சீட்டும் இக்கையேடில் இடம்பெறும் பிரதான கண்காட்சிகளுக்கு அனுமதியளிக்கும். அன்புகூர்ந்து சலுகைகளைப் பெற்றிட, தகுதிபெறும் ஆதாரத்தைக் காட்டவும். தேசிய அரும்பொருளக வருகையாளர் சேவை முகப்பிலும் சிஸ்டிக்-கிலும் நுழைவுச்சீட்டுகள் கிடைக்கும்.

**வழிகாட்டல் உலா**

காட்சிக்கூடங்களுக்கான வழிகாட்டல் உலாவில் சேர, அன்புகூர்ந்து வருகையாளர் சேவை முகப்பில் விவரம் கேட்கவும்.

**சக்கர நாற்காலி வசதி மற்றும் பூட்டுள்ள பொருள்காப்புப் பெட்டிகள்**

மின்தூக்கிகளைப் பயன்படுத்தி காட்சிக்கூடங்களுக்கு எளிதாகச் செல்லலாம். வருகையாளர்களின் பயன்பாட்டுக்காகப் பூட்டுள்ள பொருள்காப்புப் பெட்டிகள் உள்ளன.

**இணையத்தில் தேசிய அரும்பொருளகம்**

www.nationalmuseum.sg

National.Museum.of.Singapore

natmuseum_sg

**கருத்துரைப்பு**

முகவரியில் எங்களுக்கு மின்னஞ்சல் அனுப்பவும்
nhb_nm_corpcomms@nhb.gov.sg

இதன் அமைப்பு National Heritage Board

ஆதரவாளர் MCCY Ministry of Culture, Community and Youth

அச்சடித்த நேரத்தில் அனைத்து தகவலும் துல்லியமாக பதிக்கப்பட்டது. முன்னறிவிப்பு இன்றி தன் நிகழ்ச்சிகளுக்கு மாற்றம் செய்யும் உரிமை சிங்கப்பூர் தேசிய அருமபொருளகத்திற்கு உண்டு. சொற்பொழிவு, பட்டறைகள், நிகழ்ச்சிகளின் மூலம் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தும் பேச்சாளர்கள், ஒருங்கிணைப்பாளர்கள், கலைஞர்கள் சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தின் நிலையை பிரதிநிதிப்பதாக அவசியம் இல்லை. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. இந்த வெளியீட்டில் பதிக்கப்பட்ட தகவல்களை பகுதியாகவும் அல்லது முழுமையாகவும் வெளியீட்டாளரான அருமபொருளகத்தின் எழுத்துமூல அனுமதியின்றி மறு பதிக்கப்பட முடியாது. © பதிப்புரிமை 2016

# N S M
# National Museum of Singapore

## வழிகாட்டி



## பிரதான கண்காட்சிகள்

### மாடி 1
### சிங்கப்பூர் வரலாற்றுக் காட்சிக்கூடம்



சிங்கப்பூர் வரலாற்றுக் காட்சிக்கூடத்தின் புதுப்பிக்கப்பட்ட விளக்கவுரை, சிங்கப்பூர் தீவு முன்பு சிங்கப்பூரா, கிரவுன் காலனி, சியோனான்-தோ என்றழைக்கப்பட்ட காலகட்டங்களிலிருந்து இறுதியில் சிங்கப்பூர் என்றழைக்கப்பட்டது வரையிலான மேம்பாடுகளை விவரிக்கிறது. 50 ஆண்டுகாலச் சுதந்திரத்தைக் கொண்டாடும் வகையில், போருக்குப் பிந்திய போராட்டங்கள் முதல் இன்று நாம் அனுபவிக்கும் உலகமய நகரம் வரையிலான நமது நாட்டு நிர்மாணப் பயணத்தை இந்தக் காட்சிக்கூடம் தொகுத்தளிக்கிறது.

### மாடி 2
### சிங்கப்பூர் வாழ்க்கை: கடந்த 100 ஆண்டுகள்

கடந்த 100 ஆண்டுகளை உள்ளடக்கும் இந்நான்கு காட்சிக்கூடங்களும், சிங்கப்பூர் வரலாற்றின் வெவ்வேறு காலகட்டங்களின் மூலமாக அன்றாட வாழ்க்கையைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. 1920கள் முதல் 1930கள் வரையிலான காலனித்துவ காலகட்டத்தில் மக்கள் எவ்வளவு நவீனமாகவும் முற்போக்காகவும் இருந்தனர் என்பதை *நவீன காலனி* காட்சிக்கூடத்தில் அறிந்திடுங்கள். ஜப்பானிய ஆக்கிரமிப்பு காலகட்டத்தை ஆராயும் *சியோனானில் உயிர்பிழைப்பு* காட்சிக்கூடத்தில், நம்பிக்கையும் நேசமும் அளித்த தைரியத்துடன் தாக்குப்பிடித்தவர்களின் அறிவாற்றலையும் மீள்திறனையும் பற்றி மேலும் தெரிந்து கொள்ளுங்கள். ஒரு தலைமுறையின் கனவுகளையும் பேரார்வங்களையும் எடுத்துக்காட்டும் *வளரும் பருவம்* காட்சிக்கூடத்தில், நாட்டுடன் சேர்ந்து வளர்ந்த பிள்ளையின் கண்ணோட்டத்தில் 1950கள் முதல் 1960கள் வரையிலான காலகட்டத்தைக் காணுங்கள். 1970கள் முதல் 1980கள் வரையிலான காலகட்டத்தில் தலையெடுத்த புதிய, தன்னம்பிக்கை மிகுந்த சிங்கப்பூரிய அடையாளத்தை ஆராயும் *சிங்கப்பூரின் குரல்கள்* காட்சிக்கூடத்தில், சுய வெளிப்பாடுகளும் புத்தாக்கமும் முதலிடம் வகிக்கின்றன.

### கோ செங் சூ காட்சிக்கூடம்:
### ஆசையும் ஆபத்தும்



கோ செங் சூ காட்சிக்கூடத்தின் ஊக்கமளிக்கும் கண்காட்சியில் *ஆசைக்கும் ஆபத்துக்கும்* இடையிலான நெருங்கிய தொடர்பை அறிந்திடுங்கள். பசியைத் துண்டி, பயத்தை உண்டாக்கும் உயிரினங்கள், இன்பத்தை அல்லது வலியை உண்டாக்கக்கூடிய தன்மைக்காக நாடப்படும் அயல்நாட்டுச் செடிகள் ஆகியவை இடம்பெறும் இந்த ஓவியங்கள் *வில்லியம் ஃபர்குவார் இயற்கை வரலாற்று ஓவியத் திரட்டிலிருந்து* தேர்ந்தெடுக்கப்பட்டவை. மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான சிக்கலான, சில சமயங்களில் சஞ்சலமான உறவை இந்த ஓவியங்கள் ஆராய்கின்றன.

### கண்ணாடி ரொட்டான்டா:
### கானகத்தின் கதை மற்றும் சிங்கப்பூர், ஆகப்பழமையான மரம்

**10 டிசம்பர் 2016 முதல்**

சிங்கப்பூர் வரலாற்று காட்சிக்கூடத்தை மேம்படுத்தும் வண்ணம் ஈர்க்கவைக்கும் இரு புதிய கலைப்பொருட்கள் வருகையாளர்களை காட்சிக்கூடத்தின் நுழைவாயிலில் வரவேற்கும். காட்சிக்கூடத்தில் இடம்பெறும் முதல் எண்ணியல் (டிஜிட்டல்) கலைப்பொருள் வில்லியம் ஃக்குவார் தொகுப்பிலுள்ள இயற்கை வரலாற்று சித்திரங்களை மையமாக கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இக்கலைப்பொருளின் தலைப்பு *கானகத்தின் கதை*. எண்ணியல் படைப்பின் மூலம் தேசிய அரும்பொருளகத்தின் திரட்டு உயிர் பெற்று காட்சியளிப்பதை வருகையாளர்கள் காணலாம்.

அவர்களின் பல்லூடக பயணத்தின் இறுதியில், சிங்கப்பூர் கலைஞர் ராபர்ட் ஜாவின் *சிங்கப்பூர், ஆகப்பழமையான மரம்* எனும் நிழற்பட தொகுப்பை வருகையாளர்கள் காணலாம்.



கலைஞரின் சித்திரம்: டீம்லெப்பின் *கானகத்தின் கதை*

## சிறப்பு கண்காட்சிகள்

### மாடி 1

**ஒத்திகையின் கலை**

**காட்சிக்கூடம்10 | 10 டிசம்பர் 2016 முதல்**

**அனுமதி இலவசம்**



கலைஞரின் சித்திரம்: சாரா ஜு ஜிங்கின் ஒத்திகையின் கலை படைப்பு

மூன்று அலைவரிசைகளை கொண்ட ஒத்திகையின் கலை எனும் ஈர்க்கவைக்கும் நிகழ்படம் பலதுறை கலைஞர் சாரா ஜு ஜிங்கின் படைப்பாகும். வேவ்வேறு கலாச்சாரத்தைச் சேர்ந்த சிங்கப்பூர் நடன கலைஞர்கள் கலாச்சார வட்டாரங்களிலுள்ள சந்துகளில் நடன பயிற்சி மேற்கொள்வதை இக்கலைப்பொருள் சித்தரிக்கிறது. ஓர் நடன நிகழ்ச்சிக்கு பின் உள்ள கடுமையான, தீவிரமான பயிற்சியை பிரதிபலிக்கும் இந்த கலைப்பொருள், நடன கலைஞர்களின் ஒத்த உறுதியை எடுத்துரைக்கிறார் கலைஞர் சாரா. இறுதி விளைவுகளை பாராமல் செயல்முறைக்கு முக்கியத்துவம் அளிப்பதே கலைப்பொருளின் நோக்கமாகும்.

*நிகழ்படத்தில் இடம்பெறும் நடனம் அப்சராஸ் கலைகள், ஈரா நடன திரையரங்கு மற்றும் சிங்கப்பூர் ஹோக்கீயேன் உவே குவான் நடன திரையரங்கால் படைக்கப்பட்டது.*

காட்சிக்கூடம்10 பற்றி

ஆராய்ச்சிக்கூடமான காட்சிக்கூடம்10ல், இரட்டை கலை மற்றும் அறிவியல் எண்ணங்களுக்கு சிறப்புரிமையும் வழங்கப்படுகிறது.

### மாடி 2

**ஆடம்பரமான அசையும் சிறகுகள்**

**கண்ணாடி முகப்பு | 1 டிசம்பர் 2016 முதல்**

**அனுமதி இலவசம்**



கலைஞரின் சித்திரம்: சுசேன் விக்டரின் ஆடம்பரமான அசையும் சிறகுகள்

சிங்கப்பூர் கலைஞர் சுசேன் விக்டரின் ஆடம்பரமான அசையும் சிறகுகள் எனும் எட்டு சரவிளக்கு படைப்புகளாகும். அந்தரத்தில் அசையும் இந்த சரவிளக்குகள், துருவறா எஃகுகளால் செய்யப்பட்டவை. அவற்றில் ஸ்வரோவ்ஸ்கி படிகங்கள் பதிக்கப்பட்டுள்ளன.

## வரைபடம்

### மாடி 3




### மாடி 2




- 2.1 கோ செங் கு காட்சிக்கூடம்: ஆசையும் ஆபத்தும்
- 2.2 சிங்கப்பூர் வாழ்க்கை: வளரும் பருவம்
- 2.3 சிங்கப்பூர் வாழ்க்கை: சிங்கப்பூரின் குரல்கள்
- 2.4 சிங்கப்பூர் வாழ்க்கை: நவீன காலனி
- 2.5 சிங்கப்பூர் வாழ்க்கை: சியோனானில் உயிர்பிழைப்பு
- 2.6 கண்ணாடி ரொட்டான்டா
- 2.7 கண்ணாடி முகப்பு
- 2.8 ஆய்வரங்க அறைகள்
- 2.9 பேருந்து நிறுத்துமிடம்

### மாடி 1




- 1.1 Flutes
- 1.2 ஸ்டாம்ஃபர்ட் காட்சிக்கூடம்
- 1.3 வருகையாளர் சேவைகள்
- 1.4 Janice Wong Singapore
- 1.5 காட்சிக்கூடம்10
- 1.6 Food For Thought
- 1.7 த சலொன்
- 1.8 ஸ்டாம்ஃபர்ட் அலுவலகம்
- 1.9 கொண்கோஸ்
- 1.10 சிங்கப்பூர் வரலாற்று காட்சிக்கூடம்

### அடித்தளம்




- B.1 த கென்யன்
- B.2 காட்சிக்கூட அரங்கம்
- B.3 கண்காட்சிக் கூடம் 2
- B.4 கண்காட்சிக் கூடம் 1

வருகையாளர் சேவைகள் | அரும்பொருளக அன்பளிப்புக் கடை | உணவகம் | அருந்தகம்

மின்தூக்கி | கழிவறை | பாலூட்டும் அறை | பூட்டுள்ள பொருள்காப்புப் பெட்டிகள்

## கடைகள் மற்றும் உணவும், பானமும்

**மியூசியம் லேபல்**

திங்கள் – ஞாயிறு, காலை 10 மணி – மாலை 6.30 மணி

தொலைபேசி எண் (65) 6336 6387

தேசிய மரபுடைமைக் கழகம் நடத்தும் மியூசியம் லேபல் (Museum Label) அரும்பொருளகக் கடையில் வாழ்க்கையின் சிறுசிறு இன்பங்களில் திளைத்திடுங்கள்.



**சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தில் ஃபூட் ஃபோர் தாட்**

திங்கள் – ஞாயிறு, காலை 10 மணி – இரவு 7 மணி

தொலைபேசி எண் (65) 6338 9887

சிங்கப்பூர் தேசிய அரும்பொருளகத்தில் அமைந்துள்ள ஃபூட் ஃபோர் தாட் (Food For Thought), சிங்கப்பூரர்கள் ஒன்றுகூடி, நாம் அனைவரும் நமது இல்லமென அழைக்கும் நம் நகரைப் பற்றிய கதைகளைப் பகிர்ந்துகொள்ள ஊக்கமளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தேசிய அரும்பொருளகக் கிளை அதன் உணவுப் பட்டியலிலும் உணவகத்தின் வடிவமைப்பிலும் பழைய நினைவுகளோடு புத்தாக்கத்தை ஒன்றிணைக்கிறது. ஆண்டு முழுவதும், தேசிய விவகாரங்களைக் கருப்பொருளாகக் கொண்டு தனித்துவமிக்க விருந்துணவு அனுபவங்களையும் நாங்கள் திட்டமிட்டு வழங்குகிறோம். சிங்கப்பூர் எங்கிருந்து வந்தது, இப்போது எங்கிருக்கிறது, இனி எங்கு செல்ல விரும்புகிறது போன்றவை பற்றிய வெளிப்படையான உரையாடல்களுக்கான சாத்தியத்தை உருவாக்கிக் கொடுப்பதன்மூலம், உங்கள் உணவுடன் உங்கள் சிந்தனைக்கும் உணவளிக்க நாங்கள் விரும்புகிறோம்.



**ஃபுளூட்ஸ்**

திங்கள் – வியாழன்: காலை 11.30 மணி – இரவு 10 மணி (கடைசி ஆர்டர்)

வெள்ளி: காலை 11.30 மணி – இரவு 10.30 மணி (கடைசி ஆர்டர்)

சனி: காலை 10 மணி – இரவு 10.30 மணி (கடைசி ஆர்டர்)

ஞாயிறு: காலை 10 மணி – மாலை 4 மணி (கடைசி ஆர்டர்)

தொலைபேசி எண் (65) 6338 8770

flutes@flutes.com.sg | www.flutes.com.sg

"ஆசியாவின் தலைசிறந்த 101 உணவகங்களில் ஒன்று" என 2013-ம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்ட ஃபுளூட்ஸ் (Flutes), நவீன ஐரோப்பிய பாணியின் வளமான பாரம்பரியத்தை ஊக்கமாகக் கொண்ட உணவுப்பட்டியலுடன் "ஸ்மார்ட் கேஷுவல்" விருந்துணவு அனுபவத்தை வழங்குகிறது. விக்டோரியா ராணியின் பொன்விழாவை முன்னிட்டு 1887-ம் ஆண்டு முதன்முதலாகத் திறக்கப்பட்ட தேசிய அரும்பொருளகத்தின் ஆகப்பழமையான பகுதியில் அமைந்திருக்கும் இந்த உணவகம், அதன் உணவுப்பட்டியலில் புதுமையான, உற்சாகமளிக்கும் புதிய சுவைகளை நவீனமான பாணியில் படைக்கிறது. இதற்குத் துணையாக, பழைய மற்றும் புதிய உலகின் விருதுபெற்ற "ஒயின்" பானங்களும் உள்ளன. உயரமான உட்கூரையுடன் நவீனமாக வடிவமைக்கப்பட்ட விருந்து அறைகள் முதல் வெளிப்புற இடம் வரை, ஏராளமான சாத்தியங்கள் நிறைந்த விருந்துணவு அனுபவத்தை ஃபுளூட்ஸ் வழங்குகிறது.



**ஜனிஸ் வோங் சிங்கப்பூர்**

திங்கள் – சனி: காலை 11 மணி – இரவு 11 மணி

ஞாயிறு: காலை 11 மணி – மாலை 6 மணி

தொலைப்பேசி: (65) 9712 5338

மின்னஞ்சல்: info@janicewong.com.sg

இணையத்தளம்: www.janicewong.com.sg

தனது காரச்சுவையுண்டி மற்றும் இனிப்பு உணவு வகைகளில் சுவை, அமைப்பு, வெப்பநிலை, தோற்றம் ஆகியவற்றில் சமநிலையை அடைவதே சமையல் வல்லுநர் ஜனிஸ் வோங்கின் கோட்பாடாகும். *2am டிசர்பாவின்* இனிப்பு வகைகள் மற்றும் காரமான, நவீன சீன உணவு வகைகளை வழங்குகிறது ஜனிஸ் வோங் சிங்கப்பூர் (Janice Wong Singapore). ஜனிஸ் உணவகத்தின் காப்பி, தேநீர் வகைகளை பிரத்தியேகமாக தயாரிக்கிறார். உணவகத்திற்கு வருபவர்கள் 8 வகையான தேநீர் வகைகளை அனுபவிக்கலாம். ஜனிஸின் இனிப்புபண்டங்களின் படைப்புகள் மற்றும் உண்ணத்தக்க விளையாட்டு பொருட்களை விற்பனை செய்யும் கடையும் உண்டு.